| வினாத் தொகுப்பு எண் : |
|---|
| **20072593** |

# EO3HR/2022

பதிவு எண் | | | | | | | | | | |

**2022**

## தாள் – II

# இந்து மதம் சைவமும் வைணவமும்

## (பட்டப்படிப்பு தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்** குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) மற்றும் (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
9. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.**
10. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

[Turn over

## SPACE FOR ROUGH WORK

1. நம்பி ஆண்டார் நம்பி, யார் வேண்டுகோளுக்கு இணங்க தேவார திருமுறை ஏடுகளை தில்லையில் கண்டெடுத்தார்?

(A) பராந்தக சோழன்

(B) இராஜராஜசோழன்

(C) இராஜேந்திரசோழன்

(D) குலோத்துங்கசோழன்

(E) விடை தெரியவில்லை

2. "முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து", என்ற பாடலை பாடியவர்

(A) இளங்கோவடிகள்

(B) பட்டினத்தார்

(C) சேக்கிழார்

(D) மருதப்பிரான்

(E) விடை தெரியவில்லை

3. வைகானஸாகமம் ———————— என்ற மகரிஷியின் மூலமாக உபதேசிக்கப்பட்டது.

(A) போகர்

(B) விகனஸர்

(C) கொங்கனவர்

(D) விக்னேஷ்வர்

(E) விடை தெரியவில்லை

4. ருத்ரபேத ஆகமங்களின் எண்ணிக்கை ———————— ஆகும்.

(A) 8

(B) 18

(C) 28

(D) 10

(E) விடை தெரியவில்லை

5. 'விக்கிரகம்' என்பது

(A) கடவுள் விசேஷமாக விளக்கும் இடம்

(B) கோயில் இருக்கும் இடம்

(C) கோபுரம் இருக்கும் இடம்

(D) திருவிழாக்காலம்

(E) விடை தெரியவில்லை

6. மந்திரம் அதிகம் கலவாமல் செய்யும் சடங்கு

(A) சோடாசஸம்ஸ்காரம்
(B) இலட்சார்ச்சனை
(C) பிரதோஷம்
(D) சகஸ்ரநாமம்
(E) விடை தெரியவில்லை

7. 'நீலோற்பலம்' மலர் எந்த யாம பூசைக்கு உகந்தது?

(A) முதல் யாமம்
(B) இரண்டாம் யாமம்
(C) மூன்றாம் யாமம்
(D) நான்காம் யாமம்
(E) விடை தெரியவில்லை

8. 'சோணம்' என்பதன் பொருள்

(A) சோதிப்பவன்
(B) மருள்
(C) சிவப்பு
(D) பனை
(E) விடை தெரியவில்லை

9. "ஸம்ஹாரக் கோலம்" எத்தனையாவது நாள் திருவிழாவில் இடம் பெறும்?

(A) 5ம் நாள்
(B) 8ம் நாள்
(C) 10ம் நாள்
(D) 3ம் நாள்
(E) விடை தெரியவில்லை

10. “ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு” என்ற பொருளை கொண்டது ———————— ஆகும்.

(A) புராணம்

(B) சாத்திரம்

(C) தோத்திரம்

(D) இதிகாசம்

(E) விடை தெரியவில்லை

11. பெண் இறைவனால் ஆடப்படும் “கூத்து” எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) இலாஸ்யம்

(B) தாண்டவம்

(C) அபஸ்மாரம்

(D) சிலம்பொல

(E) விடை தெரியவில்லை

12. முப்பத்தாறு (36) சைவ தத்துவங்கள் என்பவை

(A) ஆன்ம தத்துவம் – 24, வித்தியாதத்துவம் – 7, சிவதத்துவம் – 5

(B) ஆன்ம தத்துவம் – 22, வித்தியாதத்துவம் – 9, சிவதத்துவம் – 5

(C) ஆன்ம தத்துவம் – 24, வித்தியாதத்துவம் – 5, சிவதத்துவம் – 7

(D) ஆன்ம தத்துவம் – 21, வித்தியாதத்துவம் – 7, சிவதத்துவம் – 8

(E) விடை தெரியவில்லை

13. இவற்றுள் "அட்டவீரட்டங்கள்" கொண்ட தலம் எவை இல்லை?

(A) திருக்கண்டியூர்
(B) திருக்கோவலூர்
(C) திருவதிகை
(D) திருக்காளத்தி
(E) விடை தெரியவில்லை

14. திருமூலர் அருளிய திருமந்திரம் எத்தனை தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன?

(A) பத்து
(B) பன்னிரெண்டு
(C) ஒன்பது
(D) ஏழு
(E) விடை தெரியவில்லை

15. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" — என்ற கூற்றை கூறியவர்

(A) மாணிக்கவாசகர்
(B) திருமூலர்
(C) சுந்தரர்
(D) திருஞான சம்பந்தர்
(E) விடை தெரியவில்லை

16. கீழ்வருவனவற்றில் தென் திசைக் கயிலை பட்டியலில் வராத ஊர்

(A) திருக்காளத்தி
(B) திருவந்திபுரம்
(C) திருச்சிராப்பள்ளி
(D) திருக்கோணமலை
(E) விடை தெரியவில்லை

17. ஆலய வழிபாட்டு முறையில் துவஜாரோகணம் என்பது

(A) தீபாராதனை
(B) அபிஷேகம்
(C) வீதி உலா
(D) கொடியேற்றம்
(E) விடை தெரியவில்லை

18. அரிசி, மணல், கோமயம், விபூதி, சந்தனம் முதலியவற்றால் செய்யப்படும் இலிங்கம்

(A) லோகஜம்

(B) க்ஷணிகம்

(C) சைலஜம்

(D) இரத்னஜம்

(E) விடை தெரியவில்லை

19. "விண்ணிழி கோயில்" அமைந்துள்ள இடம்

(A) திருவதிகை

(B) திருவீழிமிழலை

(C) திருவிண்ணகரம்

(D) கச்சூர்

(E) விடை தெரியவில்லை

20. குரு தன் சீடனுக்குச் செய்யும் உபகாரத்தை ———————— எனக் கூறுவர்.

(A) குருரேவ

(B) குண்டலனி

(C) தீக்ஷை

(D) ஞானம்

(E) விடை தெரியவில்லை

21. அன்றாடம் மாறாமல் செய்து வரும் அநுட்டானம், பூசைக்கு ———————— எனப்பெயர்.

(A) நைமித்திகம்

(B) காமியம்

(C) யோகஜம்

(D) நித்தியம்

(E) விடை தெரியவில்லை

22. “சரியை”யின் பொருட்டு, சிவாச்சாரியாரால் செய்யப்படும் தீக்கை

(A) சமய தீக்கை

(B) நிர்வாண தீக்கை

(C) மந்திர தீக்கை

(D) நயன தீக்கை

(E) விடை தெரியவில்லை

23. சமய வழிபாட்டில் நித்தியம், நைமித்திகம், காமியம் என்ற மூன்றையும் செய்தற்கு உரியவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(A) நிர்பீச தீக்கை

(B) சபீச தீக்கை

(C) மோட்ச தீக்கை

(D) பரம தீக்கை

(E) விடை தெரியவில்லை

24. "தென்முகக் கடவுள்" என்று அழைக்கப்படும் கடவுள்

(A) விநாயகர்
(B) சண்டிகேஸ்வரர்
(C) தட்சிணாமூர்த்தி
(D) சரஸ்வதி
(E) விடை தெரியவில்லை

25. வேதசிவாகமங்களை நன்றாக ஓதி உணர்ந்து அவற்றில் கூறப்பெற்ற ஒழுக்கங்களை கடைபிடிக்காதவர்

(A) உத்தமர்
(B) உத்தமருள் உத்தமர்
(C) உத்தமருள் அதர்மர்
(D) உத்தமருள் மத்திமர்
(E) விடை தெரியவில்லை

26. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இருவினை யொப்பு | 1. | மலங்கள் நீங்கும் நிலை |
| (b) | மல பரிபாகம் | 2. | ஆன்மா ஆணவ மலத்தோடு மட்டும் சேர்ந்த நிலை |
| (c) | சத்தி நிபாதம் | 3. | விருப்பு வெறுப்பற்ற நிலை |
| (d) | கேலாவத்தை | 4. | இறைவனது அருட்சக்தி ஆன்மாவின் மீது விழுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

27. 1. ஒரு மலத்தார் – விஞ்ஞானகலர்
2. இரு மலத்தார் – பிரளயாகலர்
3. மும்மலத்தார் – கன்கலர்

– இவற்றுள் சரியானது எது?

(A) 1ம், 2ம் சரி
(B) 1ம் 3ம் சரி
(C) 2ம், 3ம் சரி
(D) 1ம், 3ம் தவறு
(E) விடை தெரியவில்லை

28. “ஆக்கி எவையும் அளித்(து) ஆ சுடன் அடங்கப்” என்ற தொடரில் உள்ள ஆசு என்பதன் பொருள்

(A) புகழ்
(B) பதி
(C) குற்றம்
(D) பசு
(E) விடை தெரியவில்லை

29. கொடிக்கவி பாடியவர் யார்?

(A) அருள்நந்தி தேவர்
(B) மறைஞான சம்பந்தர்
(C) மெய்கண்ட தேவர்
(D) உமாபதி சிவம்
(E) விடை தெரியவில்லை

30. பெரியபுராணத்தின் மற்றொரு பெயர்

(A) திருமந்திரம்
(B) திருத்தொண்டர் புராணம்
(C) தேவாரம்
(D) திருவருட்பா
(E) விடை தெரியவில்லை

31. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

(A) திருமூலர் – திருமந்திரம்
(B) மாணிக்கவாசகர் – திருவாசகம்
(C) திருஞானசம்பந்தர் – திருவிசைப்பா
(D) நம்பிஆரூரர் – திருநெறித் தமிழ்
(E) விடை தெரியவில்லை

32. 'திருத்தொண்டர் புராணம்' __________ சமயநெறியோடு தொடர்புடையது

(A) சைவம்
(B) வைணவம்
(C) சாங்கியம்
(D) பௌத்தம்
(E) விடை தெரியவில்லை

33. முதல் மூன்று சைவத் திருமுறைகளை இயற்றியவர்

(A) திருஞானசம்பந்தர்
(B) சுந்தரர்
(C) மாணிக்கவாசகர்
(D) சேக்கிழார்
(E) விடை தெரியவில்லை

34. இறைவனோடு சேர மாணிக்கவாசகர் பின்பற்றிய மார்க்கம்

(A) சகமார்க்கம்
(B) தாச மார்க்கம்
(C) சன்மார்க்கம்
(D) சத்புத்திர மார்க்கம்
(E) விடை தெரியவில்லை

35. திராவிட சிசு என ஆதிசங்கரரால் அழைக்கப்பட்டவர்

(A) சுந்தரர்
(B) திருமூலர்
(C) சேக்கிழார்
(D) திருஞானசம்பந்தர்
(E) விடை தெரியவில்லை

36. முருகனை முழுமுதற் கடவுளாக கொண்ட சமயம்

(A) சைவம்

(B) சாக்தேயம்

(C) ஸௌரம்

(D) கௌமாரம்

(E) விடை தெரியவில்லை

37. சைவசமயம் பேசும் வாதம் ———————— ஆகும்.

(A) அஸத்சாரியவாதம்

(B) ஸத்சாரியவாதம்

(C) சதஸத்சாரியவாதம்

(D) இவற்றில் எதுவுமில்லை

(E) விடை தெரியவில்லை

38. சன்மார்க்கம் தொடங்கப்பட்ட ஆண்டு

(A) 1865

(B) 1875

(C) 1885

(D) 1895

(E) விடை தெரியவில்லை

39. "மரணமிலாப் பெருவாழ்வு" பற்றி பேசியவர் யார்?

(A) இராமலிங்க சுவாமிகள்

(B) ஸ்ரீராமகிருஷ்ணர்

(C) ரமணமகரிஷி

(D) வேதாத்திரி மகரிஷி

(E) விடை தெரியவில்லை

40. சிவ தீக்கையில் ஏழாவது தீக்கை யாது?

(A) திருநோக்கு பரிசம்
(B) பாவனை
(C) சாத்திரம்
(D) ஔத்திரி
(E) விடை தெரியவில்லை

41. மத்துவரது – நிலைப்படி

இறைவனுக்கும் உடலக்குமிடையே உள்ள காரண உறவு

(A) உபாதான காரணம்
(B) நிமித்த காரணம்
(C) இறுதிக் காரணம்
(D) வடிவக் காரணம்
(E) விடை தெரியவில்லை

42. மச்சம், கூர்மம் என்பன எவ்வகை புராணம் ஆகும்?

(A) சிவபுராணம்
(B) விஷ்ணுபுராணம்
(C) அக்கினிபுராணம்
(D) சூரியபுராணம்
(E) விடை தெரியவில்லை

43. பொருத்துக :

| | புராணம் | | வகை |
|---|---|---|---|
| (a) | பிரம கைவர்த்தம் | 1. | விஷ்ணு புராணம் |
| (b) | ஆக்னேயம் | 2. | சிவ புராணம் |
| (c) | பாகவதம் | 3. | அக்னி புராணம் |
| (d) | பவிஷ்யம் | 4. | சூரிய புராணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

44. கீழ்க்கண்டவற்றில் பொருந்தாதது எது?

(A) குலசேகர ஆழ்வார் – பெருமாள் திருமொழி

(B) பேயாழ்வார் – மூன்றாம் திருவந்தாதி

(C) நம்மாழ்வார் – திருவாய்மொழி

(D) பொய்கையாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி

(E) விடை தெரியவில்லை

45. 'புருஷ' என்னும் சொல் —————யை குறிக்கும்.

(A) நாராயணன்

(B) ஆன்மா

(C) உலகம்

(D) பாஸ்யம்

(E) விடை தெரியவில்லை

46. பிறப்பிலி என்று போற்றப்படுபவர்.

(A) ஆன்மா

(B) பரமபுருஷன்

(C) பிரபஞ்சம்

(D) பிரளயம்

(E) விடை தெரியவில்லை

47. பொய்கையில் அவதரித்ததன் காரணமாக இவர் ———————— என்று அழைக்கப்பட்டார்.

(A) பொய்கையார்

(B) பேயார்

(C) பூதத்தார்

(D) அருள்மாறன்

(E) விடை தெரியவில்லை

48. நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர்

(A) லோகாச்சாரியர்

(B) ஆளவந்தார்

(C) இராமானுஜர்

(D) நாதமுனி

(E) விடை தெரியவில்லை

49. வேதம் தமிழ் செய்த மாறன் என போற்றப்படுபவர் யார்?

(A) பூதத்தாழ்வார்

(B) பேயாழ்வார்

(C) பெரியாழ்வார்

(D) நம்மாழ்வார்

(E) விடை தெரியவில்லை

50. கருடாழ்வாரால் அயக்கிரிவ மந்திரம் உபதேசிக்கப் பெற்றவர்

(A) வேதாந்த தேசிகர்

(B) பெருமாள் சீயர்

(C) நாதமுனிகள்

(D) ஸ்ரீபட்டர்

(E) விடை தெரியவில்லை

51. குழந்தைப் பருவத்தில் தாய்ப்பால் அருந்தாது, அழாமலும் கண்மூடியும் கிடந்த ஆழ்வார்.

(A) திருமங்கையாழ்வார்
(B) மதுரகவியாழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) நம்மாழ்வார்
(E) விடை தெரியவில்லை

52. ஆழ்வார்களின் 1296 பாசுரங்களை இயற்றியது யார்?

(A) பேயாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) குலசேகராழ்வார்
(D) ஆண்டாள்
(E) விடை தெரியவில்லை

53. நம்மாழ்வாரின் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்த ஆழ்வார் யார்?

(A) தொண்டரடிப் பொடியாழ்வார்
(B) மதுரகவியாழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) பெரியாழ்வார்
(E) விடை தெரியவில்லை

54. பஞ்ச சம்ஸ்காரம் எனக் கூறப்படுபவை

(A) மெய், வாய், கண், மூக்கு, செவி
(B) தனு, கரணம், புவனம், போகம், அறம்
(C) அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி
(D) தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், அர்ச்சனம்
(E) விடை தெரியவில்லை

55. சௌர மத வழிபாட்டு நெறியில் எதனை வழிபடுகின்றனர்?

(A) இயற்கை

(B) சூரியன்

(C) சந்திரன்

(D) பூமி

(E) விடை தெரியவில்லை

56. தீர்த்தங்கரர்களில் முதலாமவர்

(A) மகாவீரர்

(B) பார்சுவநாதர்

(C) பாகுபலீசுவரர்

(D) ரிஷப தேவர்

(E) விடை தெரியவில்லை

57. உபநிடதங்களின் எண்ணிக்கை யாது?

(A) 10

(B) 108

(C) 18

(D) 118

(E) விடை தெரியவில்லை

58. கீழ் உள்ளவற்றில் எந்த கோசம் உபநிஷத்தில் இல்லை?

(A) பிராணமய கோசம்

(B) ஜீவமைய கோசம்

(C) அன்னமய கோசம்

(D) ஆனந்தமய கோசம்

(E) விடை தெரியவில்லை

59. விரோதிகளின் அழிவின் பொருட்டுச் செய்ய வேண்டிய கிரியா முறைகளைப் பற்றி கூறும் வேதம்.

(A) இருக் வேதம்

(B) யஜுர் வேதம்

(C) ஸாம வேதம்

(D) அதர்வண வேதம்

(E) விடை தெரியவில்லை

60. நான்கு வேதங்களின் தன்மையை பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இருக் | 1. | சந்தங், அநுஷ்ட்டு, திரிஷ்டு |
| (b) | யஜுர் | 2. | "கீதி"யை இசை |
| (c) | ஸாம | 3. | பயத்தை போக்குவது |
| (d) | அதர்வணம் | 4. | யாகங்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

61. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.

கூற்று (A) : வேதம் மறையெனப் பெயர் பெற்றது.

காரணம் (R) : தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருக்கிறது.

(A) (A) மற்றும் (R) சரியானது (A) விற்கான காரணம் (R) ஆகும்

(B) (A) மற்றும் (R) சரியானது (A) விற்கான காரணம் (R) இல்லை

(C) (A) சரியானது ஆனால் (R) தவறு

(D) (A) மற்றும் (R) தவறானது.

(E) விடை தெரியவில்லை

62. அத்வைத முறைபடி பொருத்தி காண் :

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (a) | சத் | 1. | முயற் கொம்பு |
| (b) | அசத் | 2. | உலகம் |
| (c) | சதசத் | 3. | பிரம்மம் |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 |
| (B) | 3 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

63. உலகாயுத பிரிவின் மற்றொரு பெயர்

(A) சமணம்

(B) மீமாம்சம்

(C) சாங்கியம்

(D) சாருவாகம்

(E) விடை தெரியவில்லை

64. யோக தத்துவத்தை வகுத்தவர் __________ ஆவார்.

(A) இராமானுஜர்

(B) சங்கரர்

(C) மத்துவர்

(D) பதஞ்சலி முனிவர்

(E) விடை தெரியவில்லை

65. கீழ்காணும் வாக்கியங்களை கவனி

கூற்று (A) : யோகம் என்பதற்குச் சேர்க்கையென்பது பொருள்.

காரணம் (R) : ஜீவாத்மா பரமாத்மாவோடு உள்ளத்தால் சேர்ந்துறைதலாம்.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

(B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

(E) விடை தெரியவில்லை

66. 'தரும-பூத-ஞானம்' என்றால் என்ன?

(A) முதல் நிலை ஞானம்

(B) இறுதி நிலை ஞானம்

(C) வழி நிலை ஞானம்

(D) ஜீவ நிலை ஞானம்

(E) விடை தெரியவில்லை

67. பின்வருவனவற்றுள் தவறான ஒன்றை தெரிவு செய்க.

1. சரீரங்களின் எண்ணிக்கை 5 ஆகும்.

2. சூக்கும சரீரம் யாதனாசரீரம் எனவும் அறியப்படும்.

3. சூக்கும சரீரத்தின் துணையின்றி கனவு காண முடியாது.

4. சூக்கும சரீரம் அழிந்தால்தான் சூஷ்ம உடல் உருவாகும்.

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

(E) விடை தெரியவில்லை

68. சபித்தற் பொருட்டு உரைக்கப்படும் மந்திரச் செய்யுளை __________ என்பர்.

(A) சங்கதம்

(B) மங்கதம்

(C) அங்கதம்

(D) சுங்கதம்

(E) விடை தெரியவில்லை

69. இந்துமத கூற்றின் படி பறவைகளின் பிறப்பில் உள்ள பேதங்கள் எண்ணிக்கை எத்தனை?

(A) 1,00,000

(B) 2,00,000

(C) 10,00,000

(D) 3,00,000

(E) விடை தெரியவில்லை

70. மனித உடலமைப்பில் புறக்கருவிகளில் பிருதிவின் கூறுகள் யாவை?

(A) மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை

(B) நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மஜ்ஜை

(C) ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்

(D) குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்

(E) விடை தெரியவில்லை

71. திருமந்திர உரைத்திறன் வகைப்பாட்டில் நடுவில் இருப்பது

(A) தந்திரம்

(B) மந்திரம்

(C) உபதேசம்

(D) இறைவன்

(E) விடை தெரியவில்லை

72. ஓம், ந, மோ, நா, ரா, ய, ணா, ய என்பன

(A) எட்டுச் சூட்சுமம்

(B) எட்டு அட்சரங்கள்

(C) எட்டு மந்திரம்

(D) எட்டு மகாமனு

(E) விடை தெரியவில்லை

73. மகாசங்காரத்திற்கு பிறகு உயிர்வர்க்கங்கள் அனைத்தும் ———————— எனும் நிலையை அடைந்து அடங்கிக் கிடக்கும்

(A) வித்தை

(B) கேவலம்

(C) சாரூபம்

(D) ஔத்திரி

(E) விடை தெரியவில்லை

74. எல்லா உலகங்களும் ஒரே காலத்தில் அழிவதை ———————— என்பர்

(A) மறைவு

(B) அழிவு

(C) மகாசங்காரம்

(D) ஒழிப்பு

(E) விடை தெரியவில்லை

75. கடவுள் ரூபம், ரூபாரூபம், அரூபம் எனும் மூன்று நிலைகளில் எத்தனை விதமான பெயர்களைப் பெறுகிறார்?

(A) ஒன்பது

(B) எட்டு

(C) ஏழு

(D) ஆறு

(E) விடை தெரியவில்லை

76. ஆரோபம், அத்தியாசம், பிராந்தி, மித்தை என்ற சொற்கள் குறிக்கும் கருத்து

(A) மாயை

(B) அருள்

(C) பசு

(D) பதி

(E) விடை தெரியவில்லை

77. நரகம் என்பதன் இருத்தலை ஏற்றுக்கொள்ளும் வேதாந்தி யார்?

(A) மத்துவர்

(B) இராதாகிருஷ்ணன்

(C) இராமானுசர்

(D) நிம்பார்க்கர்

(E) விடை தெரியவில்லை

78. விசிட்டாத்வைதத்தின் படி, ஆன்மாவின், 'தர்மபூத ஞானத்திற்கும்' இறைவனின் தர்மபூத ஞானத்திற்கும் உள்ள வேறுபாடு

(A) இறைவனின் ஞானம் பூரணமானது, ஆன்மாக்களின் ஞானம் குறைபாடு உடையது

(B) இறைவனின் ஞானமும், ஆன்மாக்களின் ஞானமும் பூரணமானது

(C) இறைவனின் ஞானம் மற்றும் ஆன்மாக்களின் ஞானம் குறைபாடு உடையது

(D) இறைவனின் ஞானம் பூரணமானது, ஆன்மாக்களின் ஞானம் ஒன்றும் இல்லாதது சூன்யத்தைப் போல

(E) விடை தெரியவில்லை

79. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் இவர்கள் மூவரும் எந்த மாதத்தில் தோன்றினார்கள்

(A) தை
(B) மாசி
(C) ஐப்பசி
(D) சித்திரை
(E) விடை தெரியவில்லை

80. பொருத்துக :

| | ஆழ்வார்கள் | | பாடிய பாசுரம் |
|---|---|---|---|
| (a) | மதுரகவியாழ்வார் | 1. | 473 |
| (b) | பெரியாழ்வார் | 2. | 10 |
| (c) | பேயாழ்வார் | 3. | 11 |
| (d) | திருப்பாணாழ்வார் | 4. | 100 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

81. பன்னிரு ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் எனப்படுபவர்கள்

(A) பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
(B) குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்
(C) தொண்டர் அடிப்பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார்
(D) திருமழிசை ஆழ்வார், மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வார்
(E) விடை தெரியவில்லை

82. பாரதத்தை இயற்றியவர் யார்?

(A) சூத புராணிகர்

(B) வேத வியாஸர்

(C) வால்மீகி முனிவர்

(D) வியாச முனிவர்

(E) விடை தெரியவில்லை

83. இந்திய தத்துவத்தில் ‘பிரஸ்தானத்திரய’ என்பது யாது?

(A) உபநிடம், பகவத்கீதை மற்றும் பிரம்மசூத்திரம்

(B) கடவுள், உலகம் மற்றும் ஆன்மா

(C) சிவன், பிரம்மன் மற்றும் விஷ்ணு

(D) வேதங்கள், உபநிடம் மற்றும் கீதை

(E) விடை தெரியவில்லை

84. கீதையின் இரண்டாம் ஆறு அத்தியாயம் (7 முதல் 12 வரை) ———————— ஆகும்.

(A) கர்ம காண்டம்

(B) பக்தி காண்டம்

(C) ஞான காண்டம்

(D) சுந்தரக் காண்டம்

(E) விடை தெரியவில்லை

85. சங்க இலக்கியங்களில் 'முல்லைக்கலி' என்னும் நூல் யாரைப் பற்றியது?

(A) கணபதி

(B) முருகன்

(C) சிவன்

(D) திருமால்

(E) விடை தெரியவில்லை

86. கீழ்கண்ட அட்டவணை I-ல் அட்டவணை II–ஐ இணைத்து சரியானவற்றைச் சேர்க்கவும்.

| அட்டவணை I | | அட்டவணை II |
|---|---|---|
| (a) பொய்கை ஆழ்வார் | 1. | முதல் திருவந்தாதி |
| (b) பேயாழ்வார் | 2. | இரண்டாம் திருவந்தாதி |
| (c) பூதத்தாழ்வார் | 3. | மூன்றாம் திருவந்தாதி |
| (d) திருமழிசை ஆழ்வார் | 4. | திருச்சந்தவிருத்தம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

87. பதிகத்தைத் ———————— என்பர்

(A) திருவாய்மொழி

(B) நாடகம்

(C) கூத்து

(D) வாய்பாட்டு

(E) விடை தெரியவில்லை

88. வைணவ தந்திரங்கள் கடவுளை எத்தனை படிகளாக பேசுகின்றன?

(A) 3
(B) 7
(C) 5
(D) 9
(E) விடை தெரியவில்லை

89. வைணவத் தந்திரத்தில் கடவுளுக்கு எத்தனை வடிவங்கள் உள்ளன?

(A) 6
(B) 5
(C) 3
(D) 4
(E) விடை தெரியவில்லை

90. வைணவத்தில் காணப்படும் இருவகை ஆகமங்கள் யாவை?

(A) வைகாநச ஆகமம் மற்றும் நாராயணீய ஆகமம்
(B) வைகாநச ஆகமம் மற்றும் பாஞ்சராத்திர ஆகமம்
(C) பாஞ்சராத்திர ஆகமம் மற்றும் நாராயணீய ஆகமம்
(D) பாகவத ஆகமம் மற்றும் வைகாநச ஆகமம்
(E) விடை தெரியவில்லை

91. சமண சமயத்தை சார்ந்து அதனை வளர்த்து வந்த ———————— பல்லவப் பேரரசனாகிய மகேந்திரவர்மனை சைவர் ஆக்கியவர் யார்?

(A) திருஞானசம்பந்தர்

(B) ✓ திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

(E) விடை தெரியவில்லை

92. திரிபுரங்களை எரித்த பின்பு இறைவன் ஆடிய ஆடலே ———————— எனப்பட்டது.

(A) பரதநாட்டியம்

(B) தாண்டவம்

(C) ✓ கொடுகொட்டி

(D) களிநடனம்

(E) விடை தெரியவில்லை

93. "சிலப்பதிகாரம்" என்ற நூலில் "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" என்று எந்த கோயிலை குறிப்பிடுகின்றது?

(A) ✓ சைவத் திருக் கோவில்களை

(B) சமணக் கோவில்களை

(C) கண்ணகி கோவில்

(D) காவல் தெய்வம்

(E) விடை தெரியவில்லை

94. சைவ சித்தாந்தாவில் ‘சாயுஜ்யம்’ என்பது

(A) கடவுள் இருக்குமிடத்தில் இருப்பது

(B) கடவுள் வடிவத்தை அடைவது

(C) கடவுளிடம் ஐக்கியமாவது

(D) கடவுளுக்கு அருகில் செல்வது

(E) விடை தெரியவில்லை

95. மெய்கண்டார் எழுதியது

(A) சிவஞான போதம்

(B) சிவஞான சித்தயார்

(C) சிவப்பிரகாசம்

(D) திருவருட்பயன்

(E) விடை தெரியவில்லை

96. திருமுறைகளைத் தொகுத்து வழங்கியவர் யார்?

(A) சேக்கிழார்

(B) திருநாவுக்கரசர்

(C) நம்பியாண்டார் நம்பி

(D) மாணிக்கவாசகர்

(E) விடை தெரியவில்லை

97. திருமுறை என்னும் பெயர் ———————— காலத்துக் கல்வெட்டுக்களில் தான் முதன் முதலாகக் காணப்படுகின்றது.

(A) கரிகால சோழன்

(B) முதலாம் இராஜராஜ சோழன்

(C) இராஜேந்திர சோழன்

(D) மூன்றாம் குலோத்துங்க சோழன்

(E) விடை தெரியவில்லை

98. சேக்கிழாரின் சிறப்புப் பெயர்

(A) திராவிட சிசு

(B) வன்றொண்டர்

(C) உத்தம சோழப் பல்லவன்

(D) நம்பியாரூரன்

(E) விடை தெரியவில்லை

99. திருத்தொண்டர் புராணம் ———————— என்பவர்களின் வரலாற்றை விவரிக்கிறது.

(A) நாயன்மார்கள்

(B) ஆழ்வார்கள்

(C) சித்தர்கள்

(D) ரிஷிகள்

(E) விடை தெரியவில்லை

100. அம்மையிடம் திருமுலைப்பால் உண்டு ஞானம் பெற்றவர்

(A) திருநாவுக்கரசர்

(B) சுந்தரர்

(C) மாணிக்கவாசகர்

(D) ✓ திருஞானசம்பந்தர்

(E) விடை தெரியவில்லை

101. நீலகண்ட சிவாச்சாரியரால் அருளப்பட்ட உரை

(A) ✓ கண்ட பாசியம்

(B) சங்கர பாசியம்

(C) மத்துவ பாசியம்

(D) சுத்தாத்வைதம்

(E) விடை தெரியவில்லை

102. நிம்பர்க்கரின் கொள்கை ———————— என்றழைக்கப்படுகிறது.

(A) பேதம்

(B) அபேதம்

(C) ✓ பேதாபேதம்

(D) அத்வைதம்

(E) விடை தெரியவில்லை

103. திருமழிசை ஆழ்வார் பாடிய பாசுரங்களின் எண்ணிக்கை

(A) ✓ 216

(B) 105

(C) 173

(D) 55

(E) விடை தெரியவில்லை

104. 'மருணீக்கியார்' எனும் பெயர் பெற்ற சிவனடியார்

(A) திருஞானசம்பந்தர்

(B) மாணிக்கவாசகர்

(C) ✓ திருநாவுக்கரசர்

(D) சுந்தரர்

(E) விடை தெரியவில்லை

105. 'பிரதி பிம்பவாதம்' பேசும் தத்துவம்

(A) சைவசித்தாந்தம்

(B) விசிஸ்டாத்வைதம்

(C) ✓ அத்வைதம்

(D) துவைதம்

(E) விடை தெரியவில்லை

106. பொருத்துக :

| | சப்த மாதர் | | வாகனம் |
|---|---|---|---|
| (a) | கௌமாரி | 1. | அன்னம் |
| (b) | வாராஹி | 2. | மயில் |
| (c) | பிராம்மி | 3. | கருடன் |
| (d) | வைஷ்ணவி | 4. | எருமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

107. "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப் பதிகத்தை பாடியவர் யார்?

(A) சுந்தரர்

(B) மாணிக்கவாசகர்

(C) திருஞானசம்பந்தர்

(D) திருநாவுக்கரசர்

(E) விடை தெரியவில்லை

108. சிவபெருமான், "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்", என யாருக்கு அடியெடுத்துக் கொடுத்தார்?

(A) மாணிக்கவாசகர்

(B) சுந்தரர்

(C) அப்பர்

(D) திருநாவுக்கரசர்

(E) விடை தெரியவில்லை

109. கர்ண பூஷணம் எந்த சடங்கு முறையை குறிக்கிறது?

(A) குடுமி வைத்தல்

(B) திருமணம்

(C) காது குத்தல்

(D) பூணூல் இடுதல்

(E) விடை தெரியவில்லை

110. கிருத்திகை தோறும் விரதம் இருக்கும் முறைக்கு ———————— எனப்பெயர்.

(A) வார விரதம்

(B) நட்சத்திர விரதம்

(C) திதி விரதம்

(D) சஷ்டி விரதம்

(E) விடை தெரியவில்லை

111. கூற்று (A) : திருவிழாக்கள் ஐந்தொழில்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றன.

காரணம் (B) : திருவிழாக்கள் நடைபெறும் நாட்களில் முக்கிய சடங்குகள் பின்பற்றப்படுகின்றன.

(A) (A) மற்றும் (B) சரி மேலும் (A) விற்கான காரணம் (B) ஆகும்

(B) (A) மற்றும் (B) சரி. ஆனால் (A) விற்கான காரணம் (B) அல்ல

(C) (A) சரி (B) தவறு

(D) (A) தவறு (B) சரி

(E) விடை தெரியவில்லை

112. திருவிழாக்கள் பின்வரும் எந்தவொன்றை பின்பற்றி நடைபெறுகின்றன?

(A) வேதங்கள்

(B) புராணங்கள்

(C) இதிகாசங்கள்

(D) ஆகமங்கள்

(E) விடை தெரியவில்லை

113. "நாற்றப் பாண்டம் நான்முழத்து ஒன்பது" என்னும் பாடலை பாடிய சித்தர் யார்?

(A) அகப்பேய்ச் சித்தர்
(B) குதம்பைச் சித்தர்
(C) பட்டினத்தார்
(D) பத்திரகிரியார்
(E) விடை தெரியவில்லை

114. "ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"
– எனும் கூற்றை நல்கியவர்

(A) குமரகுருபரர்
(B) சேக்கிழார்
(C) கபிலர்
(D) சுந்தரர்
(E) விடை தெரியவில்லை

115. 'சந்திர ரேகை' என்னும் நூல் எழுதிய சித்தர்

(A) கொங்கணர்
(B) கோரக்கர்
(C) தன்வந்திரி
(D) சுந்தரானந்தர்
(E) விடை தெரியவில்லை

116. சோட சோபசாரங்கள் எத்தனை?

(A) 4
(B) 8
(C) 16
(D) 32
(E) விடை தெரியவில்லை

117. கீழ்க்கண்டவற்றை ஆய்க.

கூற்று (A) : இறைவனை விக்கிரகத்தில் ஆவாகனம் செய்த பிறகே, ஸ்தாபனம் செய்யப்பட வேண்டும்.

காரணம் (R) : ஸ்தாபனம் என்பது இறைவனை அருள் செய்யுமாறு வேண்டுவதாகும்.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; மேலும் (A) விற்கான காரணம் (R) ஆகும்
(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி; மேலும் (A) விற்கான காரணம் (R) இல்லை
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) தவறு ஆனால் (R) சரி
(E) விடை தெரியவில்லை

118. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மார்பு | 1. | அர்த்த மண்டபம் |
| (b) | கழுத்து | 2. | இலிங்கம் |
| (c) | சிரம் | 3. | கர்ப்பகிரகம் |
| (d) | புருவமத்தி | 4. | மகாமண்டபம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

119. சின் முத்திரை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை ஆராய்க :

(I) யோகத்தை கையால் காட்டும் அடையாளம் சின் முத்திரையாகும்

(II) பெருவிரல் இறைவனை குறிக்கும்

(III) சுட்டுவிரல் ஆன்மாவை குறிக்கும்

(IV) மலங்களை விட்டு ஆன்மா இறைவனை அடைவதை இச்சின் முத்திரை உணர்த்துகிறது

(A) (I) மட்டும் சரியானது

(B) (III), (IV) மட்டும் சரியானவை

(C) (II), (III), (IV) மட்டும் சரியானவை

(D) அனைத்தும் சரியானவை

(E) விடை தெரியவில்லை

120. ஆலயங்களில் வேசரம் என்ற விமானம் ———————— வடிவில் இருக்கும்.

(A) சதுரம்

(B) வட்டம்

(C) எட்டுக்கோணம்

(D) ஆறுகோணம்

(E) விடை தெரியவில்லை

121. எவ்வகை தீக்கை ஆணவ மலத்தை அகற்றுகிறது?

(A) மந்த்ர தீக்கை

(B) யோக தீக்கை

(C) ஒளத்திரி தீக்கை

(D) நயன தீக்கை

(E) விடை தெரியவில்லை

122. மீன் தன் முட்டைகளைக் கண்ணால் பார்த்துப் பொரித்துக் குஞ்சாக்குவது எவ்வகை தீக்கைக்கு ஒப்பானது

(A) ஸ்பர்ச தீக்கை

(B) மானத தீக்கை

(C) நயன தீக்கை

(D) யோக தீக்கை

(E) விடை தெரியவில்லை

123. ஆலய பிரதிட்டைக்குரிய கிரியைகள் எத்தனை?

(A) 18

(B) 64

(C) 108

(D) 9

(E) விடை தெரியவில்லை

124. ஒவ்வோர் உயிரும் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் —————— ஆகும்.

(A) தனு
(B) சாதி
(C) போகம்
(D) ஆயு
(E) விடை தெரியவில்லை

125. சைவ சமயத்தில் ஆலயங்களை கழுவுதல் மற்றும் மலர் தொடுத்தல் என்பது எதனை குறிக்கிறது?

(A) சரியை
(B) கிரியை
(C) யோகம்
(D) ஞானம்
(E) விடை தெரியவில்லை

126. நிராதாரயோகத்தில் காண்பவன், காணப்படும் பொருள், காட்சி —————— ஞானம் எனப்படும்.

(A) திரிரத்னம்
(B) திரிகளம்
(C) மும்மலம்
(D) திரிபுடி
(E) விடை தெரியவில்லை

127. சிவபெருமானது முழுமுதல் தன்மையை உணர்ந்து செய்யும் சிவபுண்ணியம்

(A) புத்தி பூர்வ சிவபுண்ணியம்
(B) உபாயச் சிவ புண்ணியம்
(C) அபுத்தி பூர்வ சிவபுண்ணியம்
(D) உண்மைச் சிவபுண்ணியம்
(E) விடை தெரியவில்லை

128. இறைவனின் எண்குணங்களில் ஒன்றான இயற்கையுணர்வுடைமை என்பதை வடமொழியில் இவ்வாறு அழைப்பர்.

(A) விசுத்த தேகம்

(B) அநாதி போதம்

(C) அலுப்த சக்தி

(D) நிராமயம்

(E) விடை தெரியவில்லை

129. 'பதியினைப் போல் பசுபாசம் அனாதி' எனக் கூறியவர்

(A) மாணிக்கவாசகர்

(B) தாயுமானவர்

(C) வள்ளலார்

(D) திருமூலர்

(E) விடை தெரியவில்லை

130. சத் – என்பதன் பொருள்

(A) உள்ளது

(B) இல்லாதது

(C) என்றும் இல்லாதது

(D) அழிவது

(E) விடை தெரியவில்லை

131. சைவசமயம் கூறும் மாயையின் நான்கு காரியங்கள்

(A) கேட்டல், சிந்தித்தல், தெளிதல், தீட்சை

(B) தனு, கரணம், புவனம், போகம்

(C) ஆகமம், அனுமானம், பிரத்யட்சம், தீட்சை

(D) தீட்சை, ஆகமம், தெளிதல், போகம்

(E) விடை தெரியவில்லை

132. சைவ சமய தோத்திரங்கள் எனப் போற்றப்படுபவை

(A) பன்னிரு திருமுறை

(B) மெய்கண்ட சாத்திரம்

(C) திருவாசகம்

(D) சிவஞான போதம்

(E) விடை தெரியவில்லை

133. "பாசுபதம்" - என்பது எவ்வகை சமயம்?

(A) அகச்சமயம்

(B) புறச் சமயம்

(C) அகப்புற சமயம்

(D) புறப்புற சமயம்

(E) விடை தெரியவில்லை

134. பதினொன்றாம் திருமுறையில் 'கபிலதேவ நாயனார்' அருளிய நூல்களின் எண்ணிக்கை

(A) 3

(B) 1

(C) 5

(D) 9

(E) விடை தெரியவில்லை

135. தமிழ்வியாசர் எனப் போற்றப்படும் சிவனடியார்

(A) கபிலதேவ நாயனார்

(B) காரைக்கால் அம்மையார்

(C) பட்டினத்தடிகள்

(D) நம்பியாண்டார் நம்பி

(E) விடை தெரியவில்லை

136. மெய்கண்ட சாத்திரங்களின் எண்ணிக்கை :

(A) 14

(B) 12

(C) 18

(D) 27

(E) விடை தெரியவில்லை

137. ‘சக்தியும் சிவனும் சத்தென்னும்

சொல்லின் பகுதி விகுதிகள்’ என்று

கூறியவர் யார்?

(A) நீலகண்ட சிவாச்சாரியார்

(B) நீலகண்ட தேவனடியார்

(C) மணிவாசகர்

(D) திருஞானசம்பந்தர்

(E) விடை தெரியவில்லை

138. சக்தியே தெய்வம் என சொல்லும் சமயம்

(A) சாக்தேயம்

(B) ஸௌரம்

(C) கௌமாரம்

(D) காணாபத்தியம்

(E) விடை தெரியவில்லை

139. இராமலிங்க அடிகள் அவதரித்த ஊர்

(A) வடலூர்

(B) கருங்குழி

(C) மருதூர்

(D) சிதம்பரம்

(E) விடை தெரியவில்லை

140. 'கதாதரர்' என அழைக்கப்பட்ட அருளாளர் யார்?

(A) ரமண மகரிஷி

(B) இராமகிருஷ்ண பரமஹம்சர்

(C) இராமலிங்கர்

(D) இராமானுஜர்

(E) விடை தெரியவில்லை

141. இராமகிருஷ்ணர் யாருடைய அருளைப் பெற்றவர்?

(A) கிருஷ்ணன்

(B) காளி

(C) ராமர்

(D) தெட்சிணாமூர்த்தி

(E) விடை தெரியவில்லை

142. சுவாமி விவேகானந்தர் பிறந்த வருடம்

(A) 1853

(B) 1863

(C) 1873

(D) 1883

(E) விடை தெரியவில்லை

143. ஆதிகாவியம் என அழைக்கப்படும் நூல்

(A) இராமாயணம்
(B) மகாபாரதம்
(C) பகவத்கீதை
(D) பஞ்சமோ வேதம்
(E) விடை தெரியவில்லை

144. மூன்றாம் திருவந்தாதியின் எண்ணிக்கை யாது?

(A) 100
(B) 10
(C) 216
(D) 473
(E) விடை தெரியவில்லை

145. திருமுருகாற்றுப்படையில் திருமாலின் கொடியின் சின்னமாக குறிக்கப்படுவது

(A) நாகம்
(B) அனுமன்
(C) புலி
(D) உவணம்
(E) விடை தெரியவில்லை

146. "பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்" எனும் பாடல் வரிகள் சுட்டும் கடவுள்

(A) சிவன்
(B) விஷ்ணு
(C) பிரம்மன்
(D) சக்தி
(E) விடை தெரியவில்லை

147. ‘பிரஹ்ம சப்தப் பொருள் புருஷன்’ என்பதில் “புருஷா” என்னும் சொல் இந்தக் கடவுளைக் குறிக்கும்.

(A) நாராயணன்

(B) சிவபெருமான்

(C) முருகன்

(D) விநாயகர்

(E) விடை தெரியவில்லை

148. வைணவ தத்துவத்தின்படி, பிரபஞ்சத்தை ஆக்கி, அளித்து, அழிக்கும் மிக மிக உயரிய உண்மைப் பொருள்.

(A) விஷ்ணு

(B) முருகன்

(C) சிவன்

(D) பிரம்மன்

(E) விடை தெரியவில்லை

149. ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ என்னும் பிரபந்தத்தைப் பாடியவர்

(A) நற்கலியன்

(B) ஆண்டாள்

(C) பேயார்

(D) மதுரகவியாழ்வார்

(E) விடை தெரியவில்லை

150. ‘உபதேசத்திருநாமம்’ எனும் நூலை எழுதியவர் யார்?

(A) பிள்ளைலோகாசார்ய சீயர்

(B) திருவரங்கத்து அமுதனார்

(C) ஸ்ரீபட்டர்

(D) பின்பழகிய பெருமாள் சீயர்

(E) விடை தெரியவில்லை

151. வைணவத்தில் சரணாகதியை வலியுறுத்துவது ———— ஆகும்.

(A) பத்தி

(B) பிரபத்தி

(C) குருபக்தி

(D) தேசபக்தி

(E) விடை தெரியவில்லை

152. காஞ்சியிலிருந்த யாதவப்பிரகாசரின் மாணாக்கர்

(A) அபிராமி பட்டர்

(B) திருநாவுக்கரசர்

(C) இராமானுசர்

(D) சங்கரர்

(E) விடை தெரியவில்லை

153. வைணவ மரபில் ‘வளவே முலகில் ஆழ்வார்’ என்று சொல்லப்படுவது யாரை?

(A) திருப்பாணாழ்வார்

(B) நம்மாழ்வார்

(C) திருமங்கை ஆழ்வார்

(D) பெரியாழ்வார்

(E) விடை தெரியவில்லை

154. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மகாவிரதம் | 1. | சீலம் |
| (b) | திரிரத்தினம் | 2. | இல்லறம் |
| (c) | அனுவிரதம் | 3. | கன்மத்தின் அழிவு |
| (d) | நிர்ச்சரம் | 4. | துறவறம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

155. வைசேடிக தத்துவத்தின் மறுபெயர்

(A) ஔலூக்கிய தரிசனம்

(B) நிரிஸ்வர வைசேடிகம்

(C) வைதீக தரிசனம்

(D) வேதிக தரிசனம்

(E) விடை தெரியவில்லை

156. இறைவன் அம்மையப்பராகி இருவடிவில் தோன்றுவதேயன்றி ஒரு வடிவில் தோன்றுவது.

(A) உமா மகேசுவரர்

(B) சந்திரசேகரர்

(C) அர்த்தநாரீசுவரர்

(D) சோமாஸ்கந்தர்

(E) விடை தெரியவில்லை

157. சங்கராச்சாரியர் பாஷ்யம் செய்த முதன்மை உபநிடதங்களின் எண்ணிக்கை

(A) பத்து

(B) பதினாறு

(C) முப்பத்தாறு

(D) அறுபத்து மூன்று

(E) விடை தெரியவில்லை

158. உபநிஷதங்களின் மகாவாக்கியமான "தத் த்வம் அஸி" என்பதன் பொருள் யாது?

(A) அது நீயே ஆகிறாய்

(B) நீ அதுவே ஆகிறாய்

(C) உயிரும் நீயே ஆகிறாய்

(D) அனைத்தும் நீயே ஆகிறாய்

(E) விடை தெரியவில்லை

159. வேதசாரக் கிரியைகளை பற்றி சொல்லும் வேதம் எது?

(A) இருக் வேதம்

(B) யஜுர் வேதம்

(C) ஸாம வேதம்

(D) அதர்வண் வேதம்

(E) விடை தெரியவில்லை

160. மீளா நரகம் என்னும் நிலையை குறிப்பிடும் இந்து சமய பிரிவு

(A) விசிஸ்டாத்வைதம்

(B) மத்துவ மதம்

(C) அத்துவைதம்

(D) சைவ சித்தாந்தம்

(E) விடை தெரியவில்லை

161. இந்து சமயத்திற்கு ஆதாரமாயமைந்த வேத நூல் __________ என அழைக்கப்படுகிறது.

(A) ரிக்

(B) சுருதி

(C) ஸ்மிருதி

(D) உபநிடம்

(E) விடை தெரியவில்லை

162. 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல் எது?

(A) திருக்குறள்

(B) திருமந்திரம்

(C) திருகுரான்

(D) திருவிவிலியம்

(E) விடை தெரியவில்லை

163. கீழ்க்கண்டவற்றுள் 'மேலான அறம் எனப்படுவது அஹிம்ஸையே' என்று பொருள்படுவது எது?

(A) ஹிம்ஸா பரஅதர்ம

(B) அஹிம்ஸா பரமோதர்ம

(C) அஹிம்ஸா அபரகர்ம

(D) ஹிம்ஸா பரமாத்ம

(E) விடை தெரியவில்லை

164. முத்தி நெறியில் 'ஞான நெறி' யினை பின்பற்றிய சைவக் குரவர் யார்?

(A) அப்பர்

(B) சம்பந்தர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

(E) விடை தெரியவில்லை

165. "சேர்வார்தாமே தான் ஆகச் செயுமவன்" என்று கூறியவர்.

(A) திருஞானசம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

(E) விடை தெரியவில்லை

166. சைவ சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய படிகள் எதற்கு உதவி செய்கின்றன?

(A) மறுபிறப்பிற்கு

(B) சம்சார சாகரத்தில் உழல்வதற்கு

(C) உயிர்கள் உய்வதற்கு

(D) நரகத்தை அடைவதற்கு

(E) விடை தெரியவில்லை

167. ஆன்மா மீண்டுவாராமல் அடையும் நிலைக்கு என்ன பெயர்?

(A) தேகமுக்தி

(B) சீவமுக்தி

(C) பரமுக்தி

(D) விதேகமுக்தி

(E) விடை தெரியவில்லை

168. ____________ சரீரத்தில் சப்த, ஸ்பர்ச, ரூப, இரஸ, கந்தம் என்ற தன் மாத்ரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்று மூன்றும் உள்ளன.

(A) சூக்கும

(B) குண

(C) கஞ்சுக

(D) ஸ்தூல

(E) விடை தெரியவில்லை

169. இந்து சமய தத்துவத்தின் படி ஆன்மாக்களின் உருவவேற்றுமை எத்தனை இலட்சங்களாகக் கூறப்படுகின்றன.

(A) 33 இலட்சம்

(B) 108 இலட்சம்

(C) 84 இலட்சம்

(D) 96 இலட்சம்

(E) விடை தெரியவில்லை

170. கருப்பையில் தோன்றும் உயிரினங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) அண்டஜம்

(B) சுவேதஜம்

(C) உத்பிஜ்ஜம்

(D) சராயுஜம்

(E) விடை தெரியவில்லை

171. “சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை” என்று கூறியவர்.

(A) திருஞானசம்பந்தர்

(B) மாணிக்கவாசகர்

(C) திருமூலர்

(D) ஔவையார்

(E) விடை தெரியவில்லை

172. பொருத்துக.

(a) சூட்சும பஞ்சாக்கரம் — 1. பாசத்தைக் கெடுக்கும்

(b) ஸ்தூல பஞ்சாக்கரம் — 2. அருள், சிவத்தோடு சேர்த்து இன்பமளிக்கும்

(c) காரண பஞ்சாக்கரம் — 3. இம்மை மறுமை பயன் அளிக்கும்

(d) மகா காரண பஞ்சாக்கரம் — 4. மலத்தை நாசம் செய்யும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

173. மனதிற்குள்ளாகவே மந்திரஜபம் செய்யும் முறையின் பெயர்

(A) மானஸம்

(B) வாசகம்

(C) மந்தம்

(D) மத்யமம்

(E) விடை தெரியவில்லை

174. ரூபம் உடைய கடவுள் ——————ஆவார்

(A) சிவம்
(B) சக்தி
(C) சதாசிவம்
(D) உருத்திரன்
(E) விடை தெரியவில்லை

175. வேதாந்த தத்துவத்தின்படி ஒரே பரமான்மா பல சீவான்மாக்களாகக் காணப்படுவதற்கு ______________ தான் காரணம்.

(A) ஆனவம்
(B) கன்மம்
(C) மாயை
(D) துவேஷம்
(E) விடை தெரியவில்லை

176. சூரியன் ஒருவனாக இருந்து எல்லா உயிர்களுடைய கண்களுக்கும் ஒளியைக் கொடுப்பது போல ஒருவராய் இருந்து எல்லா உயிர்களுக்கும் விளக்கம் தருபவர்

(A) கடவுள்
(B) முனிவர்
(C) மருத்துவர்
(D) சட்ட வல்லுனர்
(E) விடை தெரியவில்லை

177. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

மத்வர்

(i) பிரக்கிருதியை மாயை என்ற பெயரில் உள்பொருளாக கொண்டவர்
(ii) வேதாந்திகள் கூறும் பொய்காட்சி அன்று மாயை என்றவர்
(iii) இறைவனின் சக்தியே மாயை என்றவர்
(iv) அபேதவாதத்தை ஆதரித்தவர்

(A) (i) மட்டும் சரி
(B) (i) ம் (ii) ம் சரி
(C) (i) (ii) (iii) சரி
(D) (iv) மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

178. பிரம்ம சூத்திரத்துக்கு இராமானுசர் எழுதிய உரை ———————— எனப்படும்

(A) மாண்டூக்கிய காரிகை

(B) ஸ்ரீபாஷ்யம்

(C) உபநிடத பாஷ்யம்

(D) பிரம்ம பாஷ்யம்

(E) விடை தெரியவில்லை

179. அச்சுதப் பிரகாசரின் சீடராகி துறவியானவர் யார்?

(A) சங்கரர்

(B) இராமானுஜர்

(C) மத்வாசாரியர்

(D) நீலகண்ட சிவாசாரியார்

(E) விடை தெரியவில்லை

180. உபநிடதங்களை நிதித்தியாசனம் செய்தல் என்றால் ———————— ஆகும்

(A) கற்றல்

(B) சிந்தித்தல்

(C) தியானித்தல்

(D) எதிர்த்தல்

(E) விடை தெரியவில்லை

181. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பெரியாழ்வார் | 1. | அருள்மாறன் |
| (b) | நம்மாழ்வார் | 2. | நற்கலியன் |
| (c) | திருப்பாணாழ்வார் | 3. | விஷ்ணு சித்தர் |
| (d) | திருமங்கையாழ்வார் | 4. | நற்பாணன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

182. முனிவாகனர் என்று சிறப்பிக்கப்படுபவர்

(A) திருமழிசை ஆழ்வார்

(B) திருப்பாணாழ்வார்

(C) மதுரகவி ஆழ்வார்

(D) குலசேகராழ்வார்

(E) விடை தெரியவில்லை

183. கீழ்க்காணும் வாக்கியங்களை ஆய்க.

I – வேதத் துதிப்பாடல்கள் வைகானச வழிபாட்டாளர்களால் பயன்படுத்தப்பெறுகின்றன

II – இந்த வழிபாட்டு முறை ஸ்ரௌத்த சாத்திரம் என்ற பெயராலும் வழங்கப் பெறுகின்றது

(A) I மட்டும் சரியானது

(B) I மட்டும் தவறானது

(C) I மற்றும் II தவறானவை

(D) I மற்றும் II சரியானவை

(E) விடை தெரியவில்லை

184. வைகானச ஆகமங்களில் உள்ள சம்கிதைகளின் எண்ணிக்கை

(A) 108

(B) 118

(C) 128

(D) 138

(E) விடை தெரியவில்லை

185. பரிபாடலில் பாடப்பெற்ற திருமாலின் அவதாரங்கள்

(A) பத்து

(B) ஏழு

(C) ஆறு

(D) ஐந்து

(E) விடை தெரியவில்லை

186. ‘அமலனாதிபிரான்’ எனும் நூலை இயற்றியவர் யார்?

(A) திருவரங்கத்து அமுதனார்

(B) நாதமுனிகள்

(C) வேதாந்த தேசிகர்

(D) ✓ திருப்பாண் ஆழ்வார்

(E) விடை தெரியவில்லை

187. ‘திராவிட வேதம்’ எனப் போற்றப்பட்ட நூல்

(A) ✓ நாலாயிர திவ்ய பிரபந்தம்

(B) தேவாரம்

(C) திருவருட்பா

(D) திருவந்தாதி

(E) விடை தெரியவில்லை

188. தம்மைத் தலைவியாகவும் தம் குருவாகிய மறைஞான சம்பந்தரை தலைவனாகவும் வைத்து பாடிய நூல் எது?

(A) ✓ நெஞ்சு விடுதூது

(B) கொடிக்கவி

(C) வினா வெண்பா

(D) உண்மை விளக்கம்

(E) விடை தெரியவில்லை

189. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க :

I – வைணவத்தின் முப்பொருள் உண்மையை 'தத்துவத்திரயம்' என்பர்

II – அவை பதி, பசு, பாசம் என்பனவாம்

(A) I ம் II ம் சரி

(B) I ம் II ம் தவறு

(C) I மட்டும் சரி

(D) II மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

190. வைணவர்கள் கருத்துப்படி திருமாலின் வடிவங்கள் எத்தனை?

(A) 3

(B) 4

(C) 5

(D) 6

(E) விடை தெரியவில்லை

191. "பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவாரே" என்று பாடியவர்

(A) பேயாழ்வார்

(B) நம்மாழ்வார்

(C) ஆண்டாள்

(D) பூதத்தாழ்வார்

(E) விடை தெரியவில்லை

192. சீவன் முத்தர் இயல்பு பற்றி கூறும் சிவஞான போத சூத்திரம்

(A) ஒன்பதாம் சூத்திரம்

(B) பத்தாம் சூத்திரம்

(C) பதினொன்றாம் சூத்திரம்

(D) பன்னிரண்டாம் சூத்திரம்

(E) விடை தெரியவில்லை

193. சைவ சித்தாந்த நூல்களின் இருபெரும் பிரிவுகள்

(A) சாத்திர நூல்கள் மற்றும் தோத்திர நூல்கள்

(B) தர்ம நூல்கள் மற்றும் நீதி நூல்கள்

(C) புராண நூல்கள் மற்றும் பஞ்ச தந்திர நூல்கள்

(D) கதை நூல்கள் மற்றும் கருத்து நூல்கள்

(E) விடை தெரியவில்லை

194. சைவ சித்தாந்தத்தில் 'பசு' என்பதன் வேர்ப்பொருள் என்ன?

(A) விலங்கு

(B) தெய்வம்

(C) கட்டுண்டது

(D) வழிபடுவது

(E) விடை தெரியவில்லை

195. 4, 5, 6-ம் திருமுறைகளை அருளியவர் யார்?

(A) சம்பந்தர்

(B) அப்பர்

(C) சுந்தரர்

(D) காரைக்கால் அம்மையார்

(E) விடை தெரியவில்லை

196. திருமூலரின் திருமந்திரம் பன்னிருதிருமுறைகளுள் __________ திருமுறையாக உள்ளது.

(A) எட்டாம்

(B) பத்தாம்

(C) ஐந்தாம்

(D) பன்னிரெண்டாம்

(E) விடை தெரியவில்லை

197. திருவிசைப்பா ஆசிரியர்களில் முதல்வராக அறியப்படுபவர்

(A) கருவூர்த் தேவர்

(B) திருமளிகைத் தேவர்

(C) கண்டராதித்தர்

(D) வேணாட்டடிகள்

(E) விடை தெரியவில்லை

198. திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றப்பட்ட இடம் —————— ஆகும்.

(A) திருவரங்கம்

(B) சீர்காழி

(C) சிதம்பரம் (தில்லை)

(D) திருவானைகாவல்

(E) விடை தெரியவில்லை

199. திருநாவுக்கரசர் எவ்விடத்தில் 'கயிலாயக் காட்சி'யை கண்டார்?

(A) திருமறைக்காடு

(B) திருமருகல்

(C) மதுரை

(D) திருவையாறு

(E) விடை தெரியவில்லை

200. எந்த சிவாசாரியர் வடநூல் ஆகமங்களின் நாற்பாதப் பொருள்களையும் வரிசைப்படுத்திக் கூறினார்?

(A) திரிலோசனசிவாசாரியர்

(B) கபிலதேவர்

(C) நக்கீர நாயனார்

(D) நம்பிஆண்டார்நம்பி

(E) விடை தெரியவில்லை

## SPACE FOR ROUGH WORK

## SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

# EO3HR/2022

*Register Number*

# 2022

# PAPER – II

# HINDU RELIGIOUS SAIVAM VAINAVAM

# (Degree Standard)

**Duration : Three Hours]** **[Total Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This question booklet contains **200** questions. Before answering the questions, you shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. **If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes and get it replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.**
3. Answer **all** the questions. All the questions carry equal marks.
4. You must write your register number in the space provided on the top right side of this page. Do not write anything else on the question booklet.
5. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the memorandum of admission (Hall Ticket).
6. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with **BLACK INK BALL POINT PEN**. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
7. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one correct answer, shade the one which you consider the best. **If you do not know the answer, you have to mandatorily shade (E).** In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
8. You should not remove or tear off any sheet from this question booklet. You are not allowed to take this question booklet and the answer sheet out of the examination room during the time of the examination. After the completion of the examination, you must hand over your answer sheet to the invigilator. You are allowed to take the question booklet with you only after the completion of examination.
9. **You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.**
10. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

SEAL